# தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை
மற்றும்
முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்
இணைந்து நடத்தும்

## இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம்

தொகுதி - II

## UGC sponsored two day National Seminar on HUMAN RIGHTS IN TAMIL LITERATURE




பதிப்பாசிரியர்
முனைவர் க. முருகேசன்

157. *Dr. T. Muraleeswari* 712
Atrocities of Bonded Labour System Portrayed in Mahasweta Devi's Select Short Stories

158. *கி. சுப்பிரமணியன்* 718
கோவூர் கிழார் பாடல்களில் மனித உரிமைக் குறிப்புகள்

159. *அ. ராஜி* 722
இலக்கியங்களில் மனித உரிமைகள்: ஒரு பருந்துப் பார்வை

160. *சு. மலர்விழி* 726
ஆண்டாள் பிரியதர்சினியின் கவிதைகளில் மனித உரிமைகள்: திருநங்கையரை முன்னிறுத்தி ஒரு தேடல்

161. *முனைவர் வெ. சுகந்தா* 731
தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

162. *முனைவர் பா.வேலம்மாள்* 734
தமிழ் இலக்கியங்களில் பெண்ணுரிமை சிந்தனைகள் (கவிதைகளை முன்வைத்து)

163. *முனைவர் மொ. இரவிக்குமார்* 739
தமிழ்க் கவிதைகளில் காணலாகும் மனித உரிமைகள்

164. *முனைவர் இரா. மணிமேகலை* 744
ஐவகை மன்றத்து அமைதி

165. *முனைவர் க. முருகேசன்* 749
வைரமுத்துவின் படைப்பில் மனித உரிமைப் பதிவுகள்

166. *ஆ. நித்யா* 756
சுஜாதாவின் மனித உரிமைப்பற்றிய சமூகப்பார்வை

167. *ம. விவேக் பிரபு* 760
வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்களின் உரிமைக் குரல்

168. *முனைவர் க. பழனிவேல்* 765
புரட்சிக்கவியில் மனித உரிமைச் சிந்தனைகள்

169. *இரா. அபிமன்யு* 769
மாத்திரை சிறுகதையில் பெண்ணுரிமை

170. *முனைவர் சு. சதீஷ்குமார்* 774
சூதுபோர்ச் சருக்கத்தில் மனிதஉரிமை மீறல்கள்

171. *ச. மல்லிகா* 779
பிரபஞ்சனின் சிறுகதைகளில் பெண்ணுரிமை

172. *மு. ஜெயலட்சுமி* 784
அகநானூறு காட்டும் பெண்ணுரிமை

173. *முனைவர் ந. இரஞ்சன்* 791
தமிழ் மண்ணின் உரிமை காப்போம்

174. *முனைவர் கு. முத்துக்குமார்* 795
இலக்கியப் படைப்பாளிக்கெதிரான உரிமை மீறல்

# 163. தமிழ்க் கவிதைகளில் காணலாகும் மனித உரிமைகள்

**முனைவர் மொ. இரவிக்குமார்**
*துறைத்தலைவர் (சுயநிதிப்பிரிவு), தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை - 641 029.*

தமிழ் இலக்கிய வகைமைகளுள் ஒன்றான கவிதை வடிவம் கற்பனை நயம், கருத்துச் செறிவு, சொல் நயம் ஆகியவற்றுடன் திறம்பட தம் கருத்தினை இச்சமுதாயத்திற்கு விளம்புகின்றது. கவிதைகளில் கவிஞர்களின் கற்பனை ஆற்றலுடன், கருத்தாழம் மற்றும் சமூகச் சிந்தனைகள் ஆகியவற்றையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. இன்று சமூகத்தில் நிலவுகின்ற சூழல்களைப் பிரதிபலிக்கின்ற சிறந்த ஒரு இலக்கிய வடிவமாகக் கவிதைகள் திகழ்கின்றன. இந்நிலையில் தமிழ்க் கவிதைகள் இச்சமுதாயத்திற்கு உணர்த்த முற்படுகின்ற மனித உரிமைகளான, பெண்ணுரிமை, வாழ்வுரிமை, தொழிலாளர்கள் உரிமை, கல்வி உரிமை போன்றவற்றைப் பற்றி ஆராய்ந்தறியும் மைய நோக்கில் இக்கட்டுரையானது அமைகின்றது.

## மனித உரிமைகள் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்

மனித உரிமைகள் பற்றி பல்வேறு கருத்துக்களும், விளக்கங்களும் காணப்படுகின்ற போதிலும், அறிஞர் எர்னஸ்ட்பார்கர் அவர்களின் கூற்றுப்படி,

***"நான் அனுபவிக்கும் எந்த ஒரு குறிப்பிட்ட உரிமையும் என்னால் அடையப்பட்டு சட்டத்தால் பாதுகாப்பளிக்கப்பட்ட ஒன்றாகும் என்கிறார்." (மனித உரிமைகள், ப:39)***

மேலும், அறிஞர் ஹாப் ஹவுஸ் என்பவரின் கூற்றுப்படி,

***"உரிமைகள் என்பவை நாம் மற்றவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறோமோ அதுவும், மற்றவர்கள் நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்களோ அதுவும் சேர்ந்ததாகும் என்கிறார்."
(மனித உரிமைகள், ப:41)***

மனிதனிடம் இயல்பாகவே பல அடிப்படை உரிமைகள் அமைந்திருப்பதாக அறிஞர் சர்ச்சில் ரூல்ஸ்பெல்ட் கூறுகிறார்.

***"வாழ்வதற்காக உள்ள உரிமை
சுதந்திர மனிதனாக இருக்க உரிமை
உடைமைகளைக் கொள்ளும் உரிமை
ஒப்பந்தம் செய்து கொள்ளும் உரிமை
கல்வி கற்கும் உரிமை" (மனித உரிமைகள், ப:133)***